

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் 2025–26 ஆம் ஆண்டிற்கான சம்பா பருவ நெல் கொள்முதல் முன்னேற்பாடு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் தலைமையில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, எஸ்.எஸ்.சிவசங்கர், முனைவர் கோவி.செழியன், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சிவ.வீ. மெய்யநாதன், சி.வி.கணேசன், டாக்டர்.டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் முன்னிலையில் தஞ்சாவூர், அரியலூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் அலுவலர்களுடன் நேற்று (29.12.2025) நடைபெற்றது.

### தமிழர்களின் பெருமையை பறைசாற்ற

# வரலாற்றுப் பதிவுகள் மிக அவசியமாகும்!

## மலேசியாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் டத்தோ ஸ்ரீ சரவணன் பேச்சு!



மலேசியாவில் வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம் சார்பில் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. தலைமையில் நடைபெற்ற தமிழ் நூல்கள் வெளியீட்டு விழாவில் ம.இ.கா. தேசியத் துணைத் தலைவர் டத்தோ ஸ்ரீ எம்.சரவணன் பங்கேற்று நூல்களை வெளியிட்டு சிறப்புரையாற்றினார்.

கோலாலம்பூர், டிச. 30 –

திருக்குறளை எடுத்துக்கொண்டால், அது இரண்டாயிரம் ஆண்டுகளைக் கடந்த ஒரு இலக்கியம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம்முடைய தமிழர்களின் நாகரிகம், பண்பாடு உயர்ந்த நிலையில் இருந்தது என்பதை இது நிரூபிக்கிறது. ரோமானிய பேரரசுடன் தமிழர்கள் வாணிபம் செய்த வரலாறையும் நாம் மறக்க முடியாது என்று மஇகா தேசியத் துணைத்தலைவர் டத்தோஸ்ரீ எம்.சரவணன் தெரிவித்தார்.

இது போன்ற காலகட்டங்களில், நம்முடைய சோழர்களின் வரலாறும், குறிப்பாக ராஜராஜ சோழரின் வரலாறும் சரியாக பதிவு செய்யப்படவில்லை என்றால், அடுத்த தலைமுறைக்கு நம்முடைய பண்பாடும் பெருமையும் தெரியாமல் போய்விடும். அத னால் தான் இது போன்ற வரலாற்றுப் பதிவு மிக அவசியமானதாக கருதப்படுகிறது என்றும் டத்தோ ஸ்ரீ சரவணன் குறிப்பிட்டார்.

ம.இ.கா. தலைமையகம், நேதாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் நூல்கள் வெளியீட்டு விழாவிற்கு தலைமையேற்று உரையாற்றுகையில் டத்தோஸ்ரீ சரவணன் மேற்கண்டவாறு கூறினார்.

வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர்கள் சங்கம், மலேசிய தமிழர்கள் சங்கம், மஇகா மற்றும் மாமன்னர் ராஜராஜ சோழர் வரலாற்று ஆய்வு, பண்பாட்டு மையம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவிற்கு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி தலைமையேற்று சிறப்பு வருகைப் புரிந்திருந்தார்.

தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர் நலனும் தமிழ் மொழி வளர்ச்சியும் என்ற நூல்களின் ஆசிரியர் ஸ்ரீதரன் கல்யாணசுந்தரம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தி.மு.க. ஆட்சியில் அயலக தமிழர்கள் நலனை காக்கவும் தமிழ் வம்சாவளி இளம் தலைமுறையினர் எளிதாக தாய்மொழியான தமிழை கற்கவும் தாய் தமிழ்நாட்டுடன் என்றுமே தொடர்பில் இருப்பதற்கு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளார் என்றும்,சோழ பேரரசர்கள் வரலாற்று நூல் வருங்கால தலைமுறைக்கு சென்று சேர எளியநடையில் எழுதப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்

எம்.கே. மணிகண்டன் வரவேற்புரையுடன் சிங்கப்பூர் தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் ஜி.வி. ராம் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மஹ்சா பல்கலைக்கழகத்தின் நிர்வாகத் தலைவர் டான்ஸ்ரீ டாக்டர் முகம்மது ஹனிபா, கிரீன்பாக்கெட் நிறுவனத்தின் தலைமைச் செயல்முறை அதிகாரி டத்தோ ஷாகுல் தாவூத், தமிழ்நாடு அரசு அயல்நாடு தமிழர் நல வாரிய உறுப்பினர் முகம்மது ஃபைசல், மலேசிய தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் அயலகத் தொடர்புக் குழு தலைவர் பெ. இராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு பிரமுகர்களாக கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

இன்று வெளியிடப்படும் இந்த நூல், சரியான காலத்தில், சரியான தேவைக்காக வந்திருக்கிறது என்று டத்தோஸ்ரீ சரவணன் தமது உரையில் குறிப்பிட்டார். இந்த கூட்டத்தில் ராஜராஜ சோழரின் பெருமையை உணர்ந்த பலரும் இருப்பது மகிழ்ச்சியான விஷயமாகும்.

உண்மையான செய்திகள் சமூகத்திற்கு சென்று சேர வேண்டும். வரலாறு திரித்து சொல்லப்படக் கூடாது. தமிழ்நாட்டின் வரலாற்றை நாம் நேர்மையாகப் பார்த்தால், மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவை பாதுகாக்கப்பட்ட காலம் திராவிட ஆட்சிக்காலம்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

அயலகத்துறை என்பது ஒரு சாதாரணத் துறை அல்ல. அது ஒரு நாட்டின் வெளியுறவுத் துறைக்கு இணையான முக்கியத்துவம் கொண்டது. அந்த அளவிற்கு பொறுப்புடன், தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டியும் தமிழர்களின் நலனை காக்கும் பணிகள் நடைபெற்று வந்துள்ளன.

எங்களைப் பொருத்தவரை, இது ஒரு அரசியல் கட்சி சார்ந்த விஷயம் அல்ல. தமிழ்நாட்டின் எல்லைகளைத் தாண்டி, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களின் வாழ்க்கை, மொழி, பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதே நம்முடைய நோக்கமாகும்.

இந்த அரிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த அனைவருக்கும், இந்த நூலை வெளியிட்ட அனைவருக்கும் டத்தோஸ்ரீ சரவணன் தமது நன்றியை தெரிவித்துக்கொண்டார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR ) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை – 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை, கடற்படை, கடலோர காவல்படை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இன்று 30–ஆம் தேதி மாலை குரோம்பேட்டையில் நடைபெறுகிறது!

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிக்கை!

காஞ்சிபுரம், டிச.30-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (30.12.2025 - செவ்வாய்கிழமை) மாலை 4.00 மணியளவில் குரோம்பேட்டையில் நடைபெறுகிறது என்று மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் இன்று (30.12.2025 - செவ்வாய்கிழமை) மாலை 4.00 மணியளவில் குரோம்பேட்டை ஜி.எஸ்.எஸ்.டி சாலையில் அமைந்துள்ள, ஆனந்தா திருமண மண்டபத்தில், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையிலும், மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ, வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ, து.மூர்த்தி, மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் - மாவட்ட அமைப்பாளர்கள், மாநகர வட்ட கழகச் செயலாளர்கள், 10 பூத் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இக்கூட்டத்தில் வருகிற 5.1.2026 அன்று நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் மாணவர்களுக்கு LAP-TOP வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்திட முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் வருகை சம்மந்தமாகவும், வருகிற 7.1.2026 அன்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்திற்கு துணை முதல்வர் - இளைய தலைவர் அவர்கள் வருகை மற்றும் பொங்கல் விழாக்களில் பங்கேற்பது குறித்தும் ஆலோசிக்கப்பட உள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

